# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2216/14 - 2021 පෙබරවාරි මස 24 වැනි බදාදා - 2021.02.24

*2216/14 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

ச. அ. இல. : PS/CSA/00/1/14/29.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி**
**கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால்**

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

1. கௌரவ ஷிரான் அந்தனி குணரத்ன அவர்கள்
   உயர்நீதிமன்ற நீதிபதி
2. கௌரவ பிரியந்த பெர்ணாந்து அவர்கள்
   மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி
3. கௌரவ தமித் தொட்டவத்த அவர்கள்
   மேல் நீதிமன்ற நீதிபதி
4. திரு. கே. எம். எம். சிறிவர்த்தன
   பிரதி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
5. கலாநிதி சனத் ஜயநெத்தி அவர்கள்
   சிரேட்ட ஆலோசகர் (வர்த்தகம்)
6. திரு. பீ. ஏ. டயஸ்
   முன்னாள் மேலதிக பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கம்
   முன்னாள் பணிப்பாளர் நாயகம், தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்


1A - G 33763 — 385 (2021/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

இலங்கைச் சுங்கம் தொடர்பாகச் சுமத்தப்படும் பல்வேறு குற்றச்சாட்டுகள் மற்றும் நிகழக்கூடுமெனக் கருதப்படும் முறைகேடுகளைத் தடுத்து, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான ஏனைய அரச திணைக்களங்கள் மற்றும் தரப்பினருடன் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு அரச வருமானத்தை அதிகரிக்கச்செய்து, சட்டரீதியான வியாபாரங்களை இலகுபடுத்தல் அத்தியாவசியமான விடயம் என்பதைக் கருத்தில்கொண்டும்,

சொல்லப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றும்போது சுங்கத் திணைக்களத்தின் நிறுவன, நிர்வாக மற்றும் வழிநடத்தல் செயற்பாடுகளைப் பயனுள்ள மற்றும் திறமையாகச் செயற்படுத்துவது அடிப்படையான தேவையொன்றாக நான் கருதுவதனாலும்,

இதன்கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களைப் புலனாய்வு செய்தல், விசாரணை செய்தல் மற்றும் அறிக்கையிடுதல் தொடர்பாக விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுதல் அவசியம் என நான் கருதுவதனாலும்,
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் வைத்து, திருத்தப்பட்ட ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயமான) 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மேற்சொல்லப்பட்ட,

1. கௌரவ ஷிரான் அந்தனி குணரத்ன அவர்கள்
   உயர்நீதிமன்ற நீதிபதி
2. கௌரவ பிரியந்த பெர்ணாந்து அவர்கள்
   மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி
3. கௌரவ தமித் தொட்டவத்த அவர்கள்
   மேல் நீதிமன்ற நீதிபதி
4. திரு. கே. எம். எம். சிறிவர்த்தன
   பிரதி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
5. கலாநிதி சனத் ஜயநெத்தி அவர்கள்
   சிரேட்ட ஆலோசகர் (வர்த்தகம்)
6. திரு. பீ. ஏ. டயஸ்
   முன்னாள் மேலதிக பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கம்
   முன்னாள் பணிப்பாளர் நாயகம், தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்

ஆகிய உங்களை இதன்கீழ் குறிப்பிடப்படும் விடயங்களைப் புலனாய்வு செய்தல், விசாரணை செய்தல் மற்றும் அறிக்கையிடுதல் தொடர்பாக எனது ஆணையாளர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

சொல்லப்பட்ட விடயங்களாவன,

(அ) இலங்கைச் சுங்கத்தில் நிகழக்கூடுமெனக் கருதப்படும் முறைகேடுகளைத் தவிர்ப்பதற்காக திறமுறையொன்றைப் பரிந்துரைப்பதற்காகவும், நிருவாகரீதியான மற்றும் தொழில்நுட்பக் குறைபாடுகளை இனங்காண்பதற்காகவும், தற்போதுள்ள நிலைமைபற்றிய புரிதலொன்றைப் பெற்றுக்கொள்வதற்காகவும், தற்போது செயற்படுத்தப்படும் கட்டமைப்புகள், முறைமைகள் மற்றும் செயற்பாடுகளை ஆய்வு செய்தல்.

(ஆ) பாதுகாப்பு மற்றும் தனிமைப்படுத்துதல் சட்டத்தின்மீது கவனத்தைச் செலுத்துதல், உச்சமட்ட வியாபார வசதிகள் வழங்குதலை உறுதிப்படுத்துவதற்காக முதலீட்டுச் சபை மற்றும் சுங்க முறைமைகள் ஒவ்வொன்றையும் ஒருங்கிணைந்த முறையில் செயற்படுத்துதல்.

(இ) தற்போது செயற்படும் பிணைக்கப்பட்ட களஞ்சிய வசதிகள், அதன் உட்கட்டமைப்பு வசதிகள் பற்றி மீளாய்வொன்றை மேற்கொண்டு, சிறந்த ஒருங்கிணைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பினொன்றினூடாக அதன் நடவடிக்கைகளை முறைப்படுத்தல்.

(ஈ) வருமானப் பாதுகாப்பு கட்டளைகளுக்காக (Revenue Protection Order) பயன்படுத்தப்படும் பல்தீர்வைக் கட்டணங்களை மீளாய்வு செய்தல்.

(உ) இலங்கைச் சுங்கத்தால் நடத்தப்பட்ட சகல உள்ளக ஆய்வுகளை மீளாய்வு செய்தல்.

(ஊ) சுங்க தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்ட சகல முன்மொழிவுகளையும் மீளாய்வு செய்தல்.

(எ) தன்னியக்கமுறையினூடாக சுங்க நிர்வாகத்தினை நவீனமயமாக்குதல்.

(ஏ) ASYCUDA கட்டமைப்பினூடாக இடர் மதிப்பீட்டை வலுப்படுத்துதல்.

(ஐ) மனித வளங்கள் பற்றிய சர்வதேச முன்னோடிகளைச் செயற்படுத்துவதன்மூலம் சுங்க முகாமைத்துவத்தை வலுவூட்டுதல்.

(ஒ) அரச வருமானம், பொருளாதார மற்றும் தேசியப் பாதுகாப்பு, சுகாதாரத் தரங்களைப் பாதுகாப்பதற்காகச் சுங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நன்மை அமைப்புகள் மற்றும் சுங்கப் புலனாய்வு முகாமைத்துவத்தின் உற்பத்தித்திறனை மீளாய்வு செய்தல்.

(ஓ) வங்கிகள், இலங்கைத் துறைமுக அதிகாரசபை, உள்நாட்டு வருமானவரித் திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், கலால் திணைக்களம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஒழுங்குறுத்துகை நிறுவனங்களுக்கிடையிலான பரிவர்த்தனைகளை மீளாய்வு செய்தல்.

(ஔ) இலங்கைச் சுங்கத்தை வலயத்தின் சிறந்த சுங்கமாக உயர்த்துவதற்காக மோசடிச் செயற்பாடுகள், முறைகேடுகள் மற்றும் நிர்வாக அதிகாரங்களைத் தவறான விதத்தில் பிரயோகிப்பதைத் தவிர்ப்பதற்காக உடனடியாக எடுக்க வேண்டிய குறுகியகால நடவடிக்கைகள் போன்று, நடுத்தர மற்றும் நீண்டகால நிறுவனரீதியிலான சீர்திருத்தங்களைப் பரிந்துரைத்தல்.

மேலும், உயர்நீதிமன்ற நீதிபதி, கௌரவ ஷிரான் அந்தனி குணரத்ன அவர்களை, மேற்போந்த ஆணைக்குழுவின் தலைவராக நான் இத்தால் நியமிக்கின்றேன்.

மேலும், மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாகத் தங்களுக்குத் தெரிகின்றவாறு தேவையான விசாரணைகள் மற்றும் சகல புலனாய்வுகளை நடாத்துவதற்கும் மேற்சொல்லப்பட்ட ஆணையாளர்கள் ஆகிய உங்களுக்கு இத்தால் அதிகாரம் மற்றும் தத்துவங்களை வழங்குவதோடு, இவ்விசாரணைமூலம் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் மற்றும் உங்களது பரிந்துரைகள் என்பவற்றை மேற்கோள்காட்டி உங்களின் கையொப்பத்தோடு சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பான இடைக்கால அறிக்கையொன்றை 2021, மாச்சு மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னரும் இறுதி அறிக்கையை 2021, மே மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னராகவும் எனக்குச் சமர்ப்பிக்குமாறு உங்களுக்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

மேலும், மேற்போந்த விடயங்களுக்குரிய ஏதேனும் புலனாய்வு அல்லது விசாரணையின் ஏதாவதொரு பகுதியொன்றை வெளிப்படையாக நடத்தக்கூடாது எனத் தாங்கள் கருதும் பட்சத்தில், அப் பகுதியை வெளிப்படையாக நடாத்தக் கூடாது என நான் உங்களுக்குக் கட்டளையிடுகின்றேன்.

மேலும் உங்களின் புலனாய்வு அல்லது விசாரணைப் பணிகளுக்காகத் தங்களால் ஒத்துழைப்பு அல்லது தகவல் கோரக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள், நியதிச்சட்ட சபை உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு நபர்களினால் அப்பணிகளுக்காக உரியவாறு வழங்கப்படக்கூடிய சகல ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டுமென்பதோடு, வழங்கக்கூடிய சகல தகவல்களையும் வழங்க வேண்டுமென்பதையும் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், பொதுமக்கள், வர்த்தக சங்கங்கள், வர்த்தக சபைகள் போன்ற தரப்பினர்களிடமிருந்து கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் என்பனவற்றைக் கோருதல் வேண்டும் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

மேலும், மேற்போந்த விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 14 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், இவ் ஆணைக்குழுவுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும் என நான் இத்தால் குறிப்பிடுகிறேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதியாகிய இன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.